(அஅ) தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (மூன்றாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2012

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *2012 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (மூன்றாம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 48/2012). மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

***மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

"2012 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (மூன்றாம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 48/2012)@ ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்."

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது. (குறுக்கீடு) திரு. க. பாலகிருஷ்ணன்.*

***திரு. க. பாலகிருஷ்ணன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டத்திருத்தத்தின்மூலம் அதாவது ஏற்கெனவே உறுப்பினரைச் சேர்ப்பதற்கு நிருவாகக் குழுவிற்கு மட்டுமே இருந்த தகுதி, நிருவாகக் குழு இல்லாத காலத்தில், பேரவையின்மூலம் உறுப்பினராகச் சேர்ப்பதற்கான திருத்தம் இங்கே முன்மொழியப்பட்டிருக்கிறது. அப்படியானால், ஏற்கெனவே 2001 ஆம் ஆண்டிலிருந்து இப்போதுவரை 'பி' கிளாஸ் உறுப்பினராக இருக்கிறவர்கள் 'ஏ' கிளாஸ் உறுப்பினர்களாக சேர்க்கப்படுவார்களா? ஏனென்றால் இதிலே புதிய உறுப்பினர்கள் பற்றித்தான் குறிப்பிடப்பட்டிருக்கிறது. 'பி' கிளாஸ் உறுப்பினர்களாக இருக்கிறவர்கள், பேரவையின் ஒப்புதல் மூலம் 'ஏ' கிளாஸ் உறுப்பினர்களாகச் சேர்க்கப்படுவார்களா என்கிற விளக்கத்தை அறிய விரும்புகிறேன்.*

பிற்பகல் 2-20

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

@ *1-11-2012 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.*

2012 நவம்பர் 2]

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவிப்பது என்னவென்றால், புதிய உறுப்பினர்கள் மட்டுமல்ல, இதில் 'B' class உறுப்பினர்களையும் சேர்க்க வேண்டுமென்று மனு கொடுத்ததன் அடிப்படையிலே, மாண்புமிகு அம்மா அவர்கள் நல்ல மனதோடு சட்டமுன்வடிவிற்கு திருத்தம் செய்து கொண்டு வந்து, 11 ஆண்டு காலமாக சங்க வளர்ச்சியில் தங்களை ஈடுபடுத்திக் கொண்டிருக்கின்ற 'B' class உறுப்பினர்கள் யார் வேண்டுமானாலும், அந்தச் சங்கத்தினுடைய சட்ட துணை விதிகளுக்குட்பட்டு இருப்பவர்கள், அந்த எல்லைக்குள் இருப்பவர்கள் யார் வேண்டுமானாலும் அந்தச் சங்கத்தில் உறுப்பினராகச் சேர்வதற்குத் தகுதியுடையவர்கள். யார் வேண்டுமானாலும் மனு கொடுக்கலாம். அவர்கள் பொது மகா சபைக் கூட்டத்தின் மூலமாகத் தேர்ந்தெடுக்கப்படுவார்கள். இதுதான் இந்தச் சட்டத்தினுடைய வடிவம்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

பிரிவுகள் 2 மற்றும் 3, திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2 மற்றும் 3 சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2012 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (மூன்றாம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 48/2012) நிறைவேற்றப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது. (மேசையைத் தட்டும் ஒலி)

8. அறிவிப்புகள்—தொடர்ச்சி

(இ) தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (நான்காம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2012 (ஆ.இ.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 2012 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (நான்காம்